டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 17.10.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 101 - Madurai | Online Edition

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

# 2025-26 ராபி சந்தைப் பருவப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, அக்.16

பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில், 2025-26 சந்தைப் பருவத்தில் ராபி பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்வதற்காக, 2025-26 சந்தைப் பருவத்திற்கான



ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு உயர்த்தியுள்ளது.

கடுகு குவிண்டாலுக்கு ரூ.300-ம், மசூர் பருப்பு குவிண்டாலுக்கு ரூ.275-ம் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. பருப்பு, கோதுமை, குங்குமப்பூ, பார்லி ஆகியவற்றின் விலை குவிண்டாலுக்கு முறையே ரூ.210, ரூ.150, ரூ.140, பார்லி ரூ.130 உயர்ந்தப்பட்டுள்ளது.

கோதுமைக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை ரூ.2425 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே ரூ. 2275 ஆக இருந்தது. மனித உழைப்பு, மாட்டு உழைப்பு, இயந்திர உழைப்பு, குத்தகை வாடகை, விதைகள், உரங்கள், நீர்ப்பாசன செலவுகள், கருவிகள், பண்ணை கட்டிடங்கள் மீதான தேய்மானம், நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி, பம்ப்




செட்டுகளை இயக்குவதற்கான டீசல் மின்சாரம் போன்ற அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய செலவை இந்த குறைந்த பட்ச ஆதரவு விலை குறிக்கிறது.

2025-26 சந்தைப் பருவத்திற்கான கட்டாய ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையின் அதிகரிப்பு, உற்பத்தி செலவை விட குறைந்தபட்சம் 1.5 மடங்கு அளவில் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கும் மத்திய பட்ஜெட் 2018-19 அறிவிப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

ராபி பயிர்களுக்கான இந்த அதிகரித்த குறைந்தபட்ச ஆதரவு விலை, விவசாயிகளுக்கு லாபகரமான விலையை உறுதி செய்வதுடன், பயிர் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சிறுதானிய விளம்பர பிரச்சார ஊர்தி மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்



கள்ளக்குறிச்சி, அக்.16

வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிறுதானியத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனை பயிரிடுவதன் அத்தியாவசத்தையும் விவசாயிகளுக்கு விளக்கும் விளம்பர பிரச்சார வாகன ஊர்தியினை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் நேற்று (16.10.24) துவக்கி வைத்தார்.

கம்பு, தினை, சாமை, வரகு, குதிரைவாலி, பனிவரகு மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானிய பயிர்களின் உற்பத்தியினை அதிகரித்திட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், சிறுதானிய உணவினை ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வேளை உணவாவது எடுத்துக்கொண்டு நோயற்ற வாழ்வினை வாழ அறிவுறுத்தும் பொருட்டு ஐந்து வாகனங்களை கொண்டு 16.10.24 முதல் 21.10.24 வரை கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தும் கிராம பஞ்சாயத்துகளுக்கு முன்னுரிமை அளித்து அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரஜத் யூ சதுர்வேதி, மாவட்ட வருவாய் அலுவலர் சத்திய நாராயணன், வேளாண்மை இணை இயக்குநர் பொ.அசோக்குமார், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் ஆனந்த் குமார் சிங், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய & மாநில அரசு திட்டம்), இரா.பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குநர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர்.விஜயராகவன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரகட்டுப்பாடு) ஆ.அன்பழகன், கள்ளக்குறிச்சி வேளாண்மை உதவி இயக்குநர் பொன்னுராசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வானகம் & SVK Organic Farm இணைந்து நடத்தும் 'இரண்டு நாள் இயற்கை வழியில் காளான் வளர்ப்பு பயிற்சி'

கரூர், அக்.16

கரூர் மாவட்டம், கடவூர், சுருமான்பட்டி, நம்மாழ்வார் உயிர் சூழல் நடுவம், தூவானகம் என்ற இடத்தில் வரும் 26.10.24 மற்றும் 27.10.24 ஆகிய இரண்டு நாள் இயற்கை வழியில் காளான் வளர்ப்பு பயிற்சி' நடைபெறும். ஈரோடு, நம்பியூர், Svk organic farm வெ.லோகநாதன் பயிற்சி அளிப்பார்.

பயிற்சி கட்டணம் (துங்குமிடம் உணவு உட்பட) ரூ.1,200/-.

+91 86680 98495, +91 86680 98492, +91 94458 79292 என்ற கைபேசி எண்ணில் அழைத்து அவசியம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு : உணவு பொருட்கள், பாலித்தின் பைகள், சோப்பு, சாம்பு, பேஸ்ட், கொசுவர்த்தி போன்றவை வெளியிலிருந்து கொண்டு வர அனுமதிக்கப்படாது. அதற்குப் பதிலாக பண்ணையில் கிடைக்கும் இயற்கை பொருள்களை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றி கற்றுக் கொடுக்கப்படும். பயிற்சியின் இடையே வெளியில் செல்லா, வெளியில் தங்கா அனுமதியில்லை. களப் பயிற்சிக்கு தேவையான உடை மற்றும் போர்வை, கைவிளக்கு (torch) எடுத்து வரவும்.

# டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாமின் பிறந்தநாளை முன்னிட்டு வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மரக்கன்று நடப்பட்டது



திருச்சி, அக்.16

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் 93வது பிறந்தநாளை (15.10.24) முன்னிட்டு விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப் பட்டன. மேலும் வேளாண் அறிவியல் நிலைய வளாகத்தில் விவசாயிகள் பயன் பெற மூலிகைத் தோட்டம் அமைக்கும் விதமாக திப்பிலி கன்று மற்றும் மரக்கன்று திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தலைமையில் நடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் ந.புனிதவதி, முனைவர் எம்.மாரிமுத்து, முனைவர் சு.ஈஸ்வரன், முனைவர் த.ஜானகி மற்றும் அலுவலர்கள் ஆகியோர் பங்கு பெற்றனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 16.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 24 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 24 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 70 | 74 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 45 | 50 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 35 | 38 | 60 | கேரட் | 44 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 46 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 26 | 30 | 63 | டர்னிப் | 40 | 44 |
| 8 | சுரைக்காய் | 20 | 26 | 64 | மு.கோஸ் | 24 | 28 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 50 | 140 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 55 | 71 | பென்னி பீன்ஸ் | 160 | 165 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 45 | 55 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 45 | 48 | 74 | பஜ்ஜி மிளகாய் | 30 | 35 |
| 19 | முருங்கை | 60 | 66 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 0 | 0 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 60 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 35 | 38 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 35 | 40 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# தரமான விதைகளை சேமிக்கும் வழிமுறைகள்

விதை உற்பத்தியில் எந்த அளவிற்கு கவனம் செலுத்தப் படுகின்றதோ அந்த அளவிற்கு விதைகளை பூச்சி மற்றும் நோய்களிலிருந்து பாதுகாத்து விதைகளை சேமிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என தஞ்சாவூர் விதைப் பரிசோதனை அலுவலர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

விதைகளை உற்பத்தி செய்து சுத்திகரிக்கப்பட்டு அதன் விதைப்பு பருவம் வரும் வரை விதை உற்பத்தியாளர்கள், விதை விநியோகம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகளால் அவர்களது இடங்களில் சேமித்து வைக்கப்படுகின்றது. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் விதைகளில் ஈரப்பதம் மற்றும் சேமிக்கும் முறைகளை முறையாக கடைப்பிடிக்காவிடில் விதைகளின் முளைப்புத்திறன் குறைந்து அதன் தரம் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக நெல் விதைகளுக்கு ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு மேலும் உளுந்து மற்றும் பயறுவகைகளுக்கு ஈரப்பதம் 9 சதவீதத்திற்கு மேலும் இருந்தால் சேமிப்பு காலத்தில் எளிதில் பூச்சி நோய் தாக்குதலுக்கு விதைகள் உட்படுத்தப்படுகிறது.

**விதைகளை சேமிக்கும் முறைகள்**

- விதைகளை சேமிக்க புதிய கோணிப்பைகள் அல்லது சுத்தமான தீவன சாக்குகளை பயன்படுத்த அறிவுறுத்தப்படு கின்றது.

- விதைகளை சேமிப்பு கலன்கள் மற்றும் கிடங்குகளை சுத்தமாக பராமரித்தல் வேண்டும். குப்பைகள், தூசிகள் இல்லா மலும் பூச்சி மற்றும் நோய்களால் சேதமடைந்த விதைகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும்.

- ஈரப்பதத்தை பொறுத்தவரை அந்தந்த விதைகளின் தரத் திற்கு தகுந்தாற் போன்று 9 முதல் 13 சதவீதத்திற்குள் இருக்கு மாறு நன்கு காயவைத்து சேமிக்க வேண்டும்.

- விதை மூட்டைகளை நல்ல காற்றோட்ட வசதி மற்றும் சூரிய ஒளிபடும் அறைகளில் தரையில் அடுக்காமல் மரம் அல்லது இரும்பு கட்டைகளின் மேல் அடுக்க வேண்டும்.

● சுவரிலிருந்து 1½ அடி இடைவெளி விட்டும் ஒரு அட்டியிலிருந்து மற்றொரு அட்டிக்கு 6 அடி இடைவெளி விட்டும் அடுக்க வேண்டும்.

● ஒரு அட்டியில் மூட்டைகளை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைக்கும் போது 6 மூட்டைகளுக்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

● 15 நாட்களுக்கொருமுறை மூட்டைகளில் பூச்சிகளின் தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும்.

● விதைகளில் மாதிரியினை எடுத்து விதைப் பரிசோதனை நிலையத்தில் ஈரப்பதம் மற்றும் பூச்சி தாக்குதலை கணக்கிடும் போது, பூச்சிகளின் சேதத்தை பொறுத்தவரை பயறு வகைகள் மற்றும் மக்காச்சோளத்திற்கு 1 சதவீதத்திற்குள்ளும் மற்ற பயிர்களுக்கு 0.5 சதவீதத்திற்குள்ளும் இருத்தல் வேண்டும்.

எனவே சேமித்து வைக்கப்பட்டிருக்கும் விதைகளை விதைப்பதற்கு முன்பு விதை உற்பத்தியாளர்கள் விநியோகம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது விதைகளின் புறத்தூய்மை,




ஈரப்பதம், முளைப்புத்திறன் பரிசோதனை மற்றும் பூச்சி, நோய்களின் சேத நிலை விவரங்கள் தெரிந்துகொள்ள, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு காட்டுத்தோட்டத்தில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தையும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வெளிப்பாளையத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தையும், திருவாரூர் மாவட்டத்திற்கு விஜயபுரத்தில் அமைந்து உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தையும் அணுகி விதை மாதிரிகளில் நெல் விதை மாதிரிகளுக்கு 100 கிராம் என்ற அளவிலும் பயறு வகைகளுக்கு 150 கிராம் என்ற அளவிலும் விதை மாதிரி எடுத்து தங்கள் முழு முகவரியுடன் பகுப்பாய்வு கட்டணமாக ரூ.80/-செலுத்தி பகுப்பாய்வு முடிவுகளை பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



பயறு வண்டு (Pulse Beetle)

இதனை, தஞ்சாவூர், விதைப் பரிசோதனை அலுவலர் து.சிவ வீர பாண்டியன் தெரிவித்தார்.




அரிசி வண்டு (Rice Weevil)


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

### தாக்குதலின் அறிகுறிகள்

● இலைகள் நீள் வாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். புழுக்கள் அதனுள்ளே இருக்கும்.

● புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டு வதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும்.

● தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மை யான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும்.

### கட்டுப்படுத்தும் முறை




**பொருளாதார சேத நிலை அளவு :** பயிர் வளர்ச்சிப் பருவத்தில் 10 சதவிகிதம் இலைச்சேதம் மற்றும் பூக்கும் பருவத்தில் 5 சதவிகிதம் கண்ணாடி இலைச் சேதம்.

● டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி களை) பயிர் நடவு செய்து 37, 44, மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை @ 2 சிசி (40,000 முட்டை ஒட்டுண்ணிகள் / ஏக்கர் / முறை) என்ற அளவில் விட வேண்டும்.

● தேவைக்கு அதிகமாக தொழு உரங்கள் இடுவதை தவிர்க்கவும் வரப்புகளை சீராக்கி அதனை சுத்தமாக வைத்தல் மற்றும் புல் இனக் களைகளை நீக்க வேண்டும்.

● தேவைக்கு அதிகமாக தழைச் சத்து இடுவதை தவிர்க்கவும். இடும் தழைச் சத்தினைப் பிரித்து கொடுக்க வேண்டும்.

● வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் @ 10 கிலோ / ஏக்கர் (அல்லது) வேப்பெண்ணை 3 சதவிகிதம் @ 6 லிட்டர் / ஏக்கர் (அல்லது ) இலுப்பை எண்ணெய் 6 சதவிகிதம் @ 12 லிட்டர்/ ஏக்கர் (அல்லது) பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் வார் குர்ஸ்டாகி 0.6

கிலோ/ஏக்கர் அல்லது பிவேரியா பாசியானா 1.15% WP 1 கிலோ/ஏக்கர் அல்லது அசாடிராக்டின் (0.03%) 400 மி.லி / ஏக்கர் அல்லது கார்போசல்பான் (6%G) 6.7 கிலோ/ஏக்கர் அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (50% SP) 400 கிராம் /ஏக்கர் அல்லது குளோரோடேரேனிலிபுருள் (18.5% SC) 60 கிராம்/ஏக்கர் அல்லது குளோரோடேரேனிலிபுருள் (0.4% G) 4 கிலோ/ஏக்கர் அல்லது பிப்ரோனில் (80% WG) 20 கிராம்/ ஏக்கர் அல்லது புளுபென்டிமைட் (39.35% SC) 20 கிராம்/ஏக்கர் அல்லது புளுபென்டிமைட் (20% WG) 50 கிராம்/ஏக்கருக்கு பயன்படுத்தி பயன்பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டு கொண்டுள்ளார்.




# புரட்டாசிப் பட்டத்திற்கேற்ற கம்பு சாகுபடி



சிறு தானியமான கம்பு குறுகிய காலப் பயிராகும். தற்போது ஊட்டச்சத்துகள் குறைபாடு இன்றைய இளைய தலை முறைகளில் காணப்படுகிறது. இதனால் சிறு வயதிலே பல நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலை. நம்முடைய முன்னோர் களின் காலத்தைப் போன்று நமது அன்றாட உணவு பழக்கத்தில் சிறுதானியங்களை சேர்க்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். அந்த வகையில் நாம் மறந்து போன கம்மங்கஞ்சியை இன்று கம்பு சாகுபடி வாயிலாக தெரிந்து கொள்ளுவோம்.

தமிழகத்தில் கிட்ட தட்ட 50,000 ஹெக்டேர் பரப்பளவில் கம்பு சாகுபடி செய்யப்படுகிறது. கம்பு பயிரின் அறிவியல் பெயர் (PENNISETUM GLUCUM) இதனை ஆங்கிலத்தில் PEARL MILLAT என்றும் இந்தியில் BAJRA என்றும் அழைக்கப்படு கின்றன. கம்பு இந்தியாவிலே 2000 ஆண்டுக்கு முன்னதாக பயிரிடப்பட்டு வருகிறது. இதனுடைய தாயகம் ஆப்பிரிக்கா நாடாகும்.

**கம்பின் ஊட்டசத்து விபரம்(100 கிராம் தானியத்தில்)**

புரதம் 11.60 கிராம், கொழுப்பு 5.கி., நார்சத்து 1.2 கி., கார்போ ஹைடிரேட் 67.5 கி, மற்றும் கால்சியம், இரும்பு சத்து, உயிர் சத்துகள் மில்லி கிராம் அளவில் உள்ளன. மற்ற சிறுதானியங்களை விட கம்பில் புரதம் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**கம்பு சாகுபடி தொழில்நுட்பங்கள்**

1) கம்பு இறவையாகவும் மானாவாரியாகவும் தென்மாவட்டங் களில் அதிகளவாக இந்த பட்டத்தில் (செப்.–அக்டோபர்) மாதங் களில் சாகுபடி செய்யப்படுகிறது. எல்லாவிதமான மண்ணிலும் வளரும் மண்ணின் கார அமில தன்மை 6.5–7.5 வரை ஏற்றது. வடிகால் வசதியுள்ள நிலங்களில் நன்றாக வளரக் கூடியது.

**இரகங்கள் :** கோ.(சியு) 9, ஐ.சி எம்.வி 221

**வீரிய ஒட்டு ரகங்கள் :** கோ 9, கோ 10

**விதையளவு :** 2 கிலோ / ஏக்கர்

**இடைவெளி :** 45X15செ.மீ இடைவெளியில் விதைத்தால் ஏக்கருக்கு 1,45,000 பயிர்கள் இருக்கும்.

**விதை நேர்த்தி :** ஒரு கிலோ விதைக்கு பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமை 1 லிட்டர் தண்ணிரில் கலந்து விதைகளை 6 மணி நேரம் ஊற வைத்து, உலர்த்தி பின் விதைக்க வேண்டும்.

**உர அளவு :** மானாவாரி NPK 16:8:8, தொழு உரம் 5 டன், நுண்ணூட்ட உரம் 5 கிலோ (M.N.MIXTURE FOR MILLAT)

**களை நிர்வாகம்**

விதைத்த 15வது மற்றும்30வது நாளில் கைகளை எடுக்க வேண்டும். பயிரில்லாத இடங்களில் அதிகமாக உள்ள இடங்களில் இருந்து பிடுங்கி நடலாம். அடியுரமாக 50% தழை மற்றும் முழுமையாக மணி, சாம்பல் சத்துகளை இடவேண்டும். விதைத்த 20, 40வது நாளில் மீதமுள்ள தழைசத்தை இரு பிரிவுகளாக பிரித்து இடலாம். பொதுவாக மானாவாரியில் பயரில் பூச்சி மருந்து தெளிப்பது இல்லை. தேவைபடின் அருகேயுள்ள விவசாய விரிவாக்க மையத்தையோ கிசான் கால் சென்டர்களையோ அணுகலாம்.

**அறுவடை**

இலைகள் மஞ்சளாக மாறி தானியங்கள் பால் பிடித்து) கடினமான பிறகு கதிர்களை அறுவடை செய்து தட்டி தானியங்களை பிரித்தெடுக்கலாம். அதிக நார்சத்துள்ள சிறுதானியங்களை உணவாக எடுத்துக்கொள்ளுவோம். சிறுதானியங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி (VALVE ADDED) விற்பனை செய்து அதிக வருமானம் பெறலாம். எந்தவித கூடுதல் செலவு இல்லாமல், மற்ற பயிர்கள் சாகுபடி செய்வதை விட சிறுதானியங்களை அதிகமாக சாகுபடி செய்யலாமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# நீல வண்ண ஒட்டும் பொறி

நீல வண்ண பொறிகள் இலைப்பேன்களை கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் உதவும் நச்சுத்தன்மையற்ற வழியாகும்.

இதன் மூலம் பூச்சிகள் நீல நிறத்தால் ஈர்க்கப்படுகின்றன மற்றும் உலர்த்தாத பசை, பூச்சியை பொறியில் ஒட்ட செய்கிறது.




**பயன்படுத்தும் முறை**

ப்ளைவுட்போடு அல்லது கார்ட்போடின் புதிய அல்லது பயன் படுத்தப்பட்ட தாள்களை எடுத்து நீல வண்ணத்தீல் பெயிண்ட் செய்யவும் உலர்த்துவதற்கு அனுமதிக்கவும். வர்ணம் பூசப்பட்ட பலகையில் கிரீஸ் அல்லது பசை தடவவும். மூங்கில் கம்புகளின் உதவியுடன் பயிர் விதானத்திற்கு மேலே பொறிகளை அமைக் கவும். ஹெக்டேருக்கு 12 பொறிகள் பரிந்துரைக்கப்படுகிறது.

**மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி**

வயலில் உள்ள பூச்சிகளின் எண்ணிக்கையைக் கண்காணிப்ப தற்காக உருவாக்கப்பட்ட பொறிகளுள் ஒன்று தான் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி. இது பூச்சிகளை இதன் நிறம் மூலம் ஈர்த்து பசையில் ஒட்ட வைக்கிறது.

**ஈர்க்கப்படும் பூச்சிகள்**

வெள்ளை ஈக்கள், இலைப்பேன், அசுவினி பூச்சி, இலை சுருட்டு பூச்சி

**பயன்படுத்தும் முறை**

மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் பல்வேறு வடிவங்கள் (செவ்வகம் வட்டம் அல்லது டேப்பின் வடிவம்) மற்றும் அளவுகளில் உள்ளன.

இந்த பொறிகளில் பூச்சிகள் ஒட்டி கொள்வதற்காக விளக்கெண்ணெய், வெள்ளை கிரீஸ் அல்லது வாஸ்லைன் பூசப்பட்டிருக்கும்.

பூச்சிகள் மஞ்சள் அட்டையுடன் இணையும் போது, பசையில் சிக்கிக் கொள்ளும், சிக்கிக் கொண்ட பூச்சிகள் பசையில் இருந்து விடுபட இயலாமல் இறந்துவிடும்.

அளவைப் பொறுத்து, 250 முதல் 1000 சதுர அடி பரப் பளவிற்கு ஒரு பொறி பரிந்துரைக்கப்படுகிறது.

மூங்கில் கம்புகளின் உதவியுடன் பயிர் விதானத்திற்கு மேலே பொறிகளை அமைக்க வேண்டும். ஹெக்டேருக்கு 12 பொறிகள் பரிந்துரைக்கப்படுகிறது.

தகவல் : **ர.நிரஞ்சனா, மூன்றாம் ஆண்டு மாணவி, ர.மஞ்சு, உதவி பேராசிரியர் (பூச்சியியல்), நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, இராமநாதபுரம்.**

# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்த மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா

அரியலூர், அக்.16

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) நீடித்த நிலையான கரும்பு சாகுபடி



குறித்த மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா, திருச்சி மாவட்டம், சிறுகமணியில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ராஜா பாபு தலைமை வகித்தார். பயிர் பெருக்கம் மற்றும் மரபியல் துறை பேராசிரியர் டாக்டர் அன்பானந்தன், கரும்பு சாகுபடி பருவம், கரும்பு இரகங்கள், 6-7 மாதங்கள் வயதுடைய கரும்பி லிருந்து பெறப்படும் 5000 ஒரு பரு சீவல்கள் கொண்டு குழித் தட்டு நாற்றங்கால் அமைப்பது, பின் 25-35 நாட்களில் நாற்றுகளை நடவு செய்தல், உர நிர்வாக முறைகள், சொட்டுநீர் உரப்பாசனம், களை நிர்வாகம், ஊடுபயிர் சாகுபடி, கரும்பு பூஸ்டர் எனும் பயிர் வளர்ச்சி ஊக்கியை நடவு செய்தபின் 45வது நாள் 1 கிலோ, 60வது நாள் 1.5 கிலோ மற்றும் 75வது நாள் 2 கிலோ தெளிப்பதால் கரும்பில் சர்க்கரை அளவு கூடும் எனவும் 20 சதம் கூடுதல் மகசூல் பெறலாம் எனவும் மகசூல் அதிகரிக்கும் தொழில் நுட்பங்களை விளக்கினார்.

டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டை கொண்டு இடைக்கணுப்புழுவைக் கட்டுப்படுத்தும் முறை, செவ்வழுகல் நோய் கடடுப்பாட்டு முறை, சமீப காலமாக கரும்பை பாதிக்கும் பொக்கோ போயிங் நோய் கட்டுப்பாட்டு முறைகளை விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். மேலும் கரும்பிலிருந்து ஒரு பரு சீவல் வெட்டி எடுக்கும் கருவி கொண்டு ஒரு பரு சீவல் வெட்டி எடுக்கும் முறை விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய மண்ணியல் துறை பேராசிரியர் டாக்டர் ஜானகி வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள், மண் ஆய்வின் முக்கியத்துவம், மண் ஆய்வு முடிவுகளின்படி உரமிடுவதன் அவசியம், பேரூட்ட, நுண்ணூட்ட சத்துக்கள், உயிர் உரங்களின் பயன்பாடு, சொட்டுநீர் உரப்பாசனம் மூலம் நீரில் கரையும் உரங்களை பயிர்களுக்கு அளிக்கும் முறை, ஒருங்கிணைந்த பண்ணையம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி நன்றி கூறினார். இக்கண்டுணர் சுற்றுலா-விற்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ் மற்றும் முன்னோடி விவசாயிகள் செய்திருந் தனர். ஜெயங்கொண்டம் மற்றம் தா.பழூர் வட்டார விவசாயி களும் பண்ணை மகளிரும் இக்கண்டுணர் சுற்றுலாவில் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கான இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

திருப்பூர், அக்.16

இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம் மற்றும் திருப்பூர், வேளாண்துறை, இணைந்து உடுமலையில் விவசாயிகள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண் உதவி இயக்குனர், உடுமலைபேட்டை, ஷீலா விவசாயிகளை வரவேற்று வேளாண் துறையின் பயிர் காப்பிட்டு திட்டங்கள் பற்றி விளக்கினார். இப்கோ கள அதிகாரி மாரியப்பன் மக்காச்சோளம், காய்கறி பயிர்கள் மற்றும் தென்னையில் இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா பயன்படுத்தும் முறைகள் மற்றும் நன்மைகள் பற்றி விளக்கினார். மேலும், விவசாயிகள் குறைந்த செலவில் நானோ உரங்களை கிசான் ட்ரோன் மூலம் தெளித்து பயன் பெறலாம் என்றும் நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயி களுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கட ஹரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார். பின், திருப்பூர், வேளாண் துறை இயக்குனர் கிருஷ்ண வேணி, விவசாயத்தில் நுண்ணூட்ட உரங்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றால் ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்துரைத்தார். அவரை தொடர்ந்து கே.வி.கே அதிகாரிகள் இயற்கை வேளாண் மையின் முக்கியத்துவத்தையும், கால்நடை மருத்துவர்கள் கால்நடை பராமரிப்பு பற்றியும் விவசாயிகளுக்கு விளக் கினார்கள். இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர்.



# உலக உணவு தினம்-ஓர் பார்வை

அக்டோபர் திங்கள் 16-ஆம் நாள் உலகெங்கும் உணவு தினம் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு 1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அந்த அமைப்பு துவங்கப்பட்ட நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் உலக உணவு தினமானது 1945 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16-ஆம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளானது, ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 150க்கும் மேற்பட்ட நாடுகளில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகளாவிய உணவு மற்றும் பசி பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உலக உணவு தினத்தின் முக்கிய குறிக்கோளாகும். மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளில் உணவே முதல் இடத்தை வகிக்கிறது. இந்தப் பொன்னாளில், மனித சமூகத்தில், உணவின் பங்கு குறித்து சிந்திப்பது அவசியமாகும். உலக உணவு உற்பத்தியில் நமது பாரதம் சிறந்த சிறப்பான தொண்டாற்றி உள்ளது. உலகத்தின் மொத்த பரப்பளவில் நமது நாடு ஏழாவது இடத்தில் இருந்தாலும், பல்வேறு உணவுப் பொருட்களான அரிசி, பயறு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், பழ வகைகள் போன்றவைகளின் உற்பத்தி யிலும் நமது பாரத நாட்டின் பங்கு இன்றியமையாததாகும்.

அதேப்போல், கால்நடைச் செல்வங்களின் உற்பத்தியிலும், உலகளவில் நமது பாரத நாடுத னக்கென்று சிறந்த சிறப்பான தொரு இடத்தைப் பிடித்துள்ளது. குறிப்பாக, பால் உற்பத்தியில் உலகளவில் முதல் இடத்தையும், இறைச்சி, முட்டைகள் உற்பத்தியில் முறையே ஆறு மற்றும் ஒன்பதாவது இடத்தையும் வகிக்கிறது.

நீர், நிலம், தாவரங்கள், பிராணிகள் போன்ற இயற்கை வளங் களையும், உயிரின வேறுபாடுகளையும், பல்வேறு தட்பவெப்ப மண்டலங்களையும் கொண்டுள்ள நம் நாட்டில், உழவுத் தொழிலை நம்பியே கோடிக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களில் வாழ்க்கை நடத்துகின்றனர். உற்பத்தி அளவில் சிறப்பான வெற்றிகளைக் கொண்ட நமது பாரத நாடு உணவுத் தன்னிறைவில் வெகுவாகவே முன்னேறி வருகிறது. ஆயினும்,உணவு உற்பத்தித் திறன் மற்றும் தரம் ஆகியவைகளில் நம் நாடு சாதிக்க வேண்டியவைகள் நிறைய உள்ளன. இயற்கை மூலங்களின் நசிவுமற்றும் மேலாண்மைப் பராமரிப்பு, பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் இருக்கும் உழவு நிலங்கள், பருவமழை தவறுதல், இயற்கைப் பேரிடர்கள், அதிக

வெப்பத்துடன் கூடிய சுற்றுபுறச் சூழ்நிலைகள், விவசாயிகளின் சமுகப் பொருளாதாரப் பின்னனி, போக்குவரத்து, வணிகத் தொடர்பு, மதிப்புக்கூட்டல் போன்ற கட்டமைப்புகளின் குறைபாடுகள் ஆகிய பல்வேறு காரணங்களால் நமது பாரத நாட்டின் உணவு உற்பத்தித் திறன் மற்றும் தரத்தில் குறைபாடுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாகும்.

**நோக்கம்**

1981 ஆம் ஆண்டு 'உணவிற்கு முதலிடம்' என்றக் கொள்கையை மையக் கருத்தாகக் கொண்டு, அதை நோக்கி இலக்குப் பயணம் மேற்கொள்வதற்காகச் செயல் திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுச் செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப் பானது, விவசாயத்தை மட்டுமே மையமாகக் கொண்டு, அதைச் சுற்றிப் பல செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

அவைகளில் சில,

2015 : சமூகப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற வறுமையை ஒழித்தல்

2016 : பருவகால மாற்றங்களுக்கேற்ப உணவு மற்றும் விவசாயத்தை மேற்கொள்ளல்

2017 : இடம் பெயர்வு, எதிர்கால மாற்றம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு

2018 : எங்கள் எதிர்காலத்திற்கான எங்கள் நடவடிக்கை

2023 : சர்வதேச தினை ஆண்டு

2024 : தண்ணீரே உணவு, தண்ணீர் தான் வாழ்க்கை

இதுவே 2024 ஆம் ஆண்டுக்கான உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் கருப்பொருள் ஆகும்.மேலும் நிலத்தடி நீர் மற்றும் நன்னீர் இருப்பு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. எனவே, உலக உணவு மற்றும் விவசாய அமைப்பானது, உலக உணவு தினத்தில் தண்ணீரின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதனைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவது குறித்தும், தண்ணீரை வீணாக்காமல், அதனைச் சேமிக்கும் முறைகள் குறித்தும் இந்த நல்ல நாளில் தனது கருப்பொருளில் எடுத்துரைத்துள்ளது. அதனால் தான் நம்ம ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பார்கள் அல்லவா? ஆகவே, தண்ணீரானது, பூமியில் உணவு மற்றும் வாழ்க்கையின் முக்கிய ஆதாரமாக இருப்பதால், தண்ணீரை

தண்ணீரை வீணாக்காமல், அதனைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு 2024 ஆம் ஆண்டுக்கான உலக உணவு தினத்தில் வலியுறுத்தியுள்ளது.

உலக உணவு தினம் கொண்டாடப்படும் இந்நன்னாளில்,சரிவிகித சமச்சீர் உணவு, மனித இனத்தின் எல்லாப் பகுதியினருக்கும் அத்தியாவசியமாகும். குறிப்பாகக் குழந்தைகள், இளைஞர்கள், கருவுற்றப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியவர்கள் எனஅனைவருக்குமே உணவில் தகுந்த அளவிலான சக்தி மற்றும் புரதப் பொருட்கள் அவசியமாகும். சக்தித் தேவைகளைத் தானியங்கள், மாவுப் பொருட்கள், எண்ணெய் பொருட்கள் பூர்த்தி செய்து விடுகின்றன. அதேசமயம், மனிதர்களின் புரதத் தேவைகளைக் கால்நடை உணவுப் பொருட்களான பால், முட்டை மற்றும் இறைச்சி பூர்த்தி செய்து விடுகின்றன. இத்தகைய கால்நடை உணவுப் பொருட்கள் மனித உடலுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச் சத்துகளை அளிப்பதால் இவைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆகவே, உலக உணவு தினத்தைக் கொண்டாடும் வேளையில் நாம் யாவரும், உணவுத் துறை வளர்ச்சி மூலம் பசி, பட்டினி, பஞ்சம் மற்றும் வறுமை போன்றவைகளை ஒழித்து, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு சமூகத் தேவைகளுக்குத் தீர்வு கண்டு, நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், ஆற்றல் மிக்க இந்தியாவை உருவாக்குவோம்.

மேலும், இந்நன்னாளில் உணவுப் பொருட்களைச் சரியான முறையில் பயன்படுத்தவும், அவைகள் வீணாவதைத் தடுக்கவம், மீதியான உணவுப் பொருட்களைத் தேவைப்படுவோருக்கு கொடுக்கவும், நாம் உளமாற உறுதி எடுத்துக் கொண்டால் பசியையும், பட்டினியையும் விரட்டி நமது தாயகத்தை தரணியில் தலைநிமிரச் செய்வோமாக!

தகவல் : **மூ.சுதா, இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி – 625534.**




இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண் வளர்ச்சி திட்ட பயிற்சி



திண்டுக்கல், அக்.16

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்குள்ளான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் விவ சாயிகள் பயிற்சி ஜி நடுப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி மாவட்ட கவுண்சிலர் சுப்புலெட்சுமி அவர்கள் தலைமையில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் ஆலோசனைப்படி எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சிய–ாளர் டாக்டர் செல்வ முகிலன் மாக்காச்சோள சாகுபடி மற்றும் பராமரிப்பு முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். செல்லில் அக்ரி சென்ரல் என்ற ஆப்பினை பயன்படுத்தி ஒரு பயிரின் போட்டோ எடுத்து அனுப்பினால் அது பத்து வினாடிகளில் அதன் நோய் மற்றும் பூச்சி பற்றிய விபரம் அதனை சரிசெய்யும் முறை நமக்கு செல்லில் வந்துவிடும். இதை பயன்படுத்தியும் விவாசாயிகள் பயன் பெறலாம் என கூறினார். இப்பபிற்சியில் உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் துறை சார்ந்த திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் விவசாயிகளை ஒருங் கிணைத்து பெரிதும் உதவினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# பூச்சம்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கு ராபி விவசாயிகள் பயிற்சி

மதுரை, அக்.16

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பூச்சம் பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு ராபி விவ சாயிகள் பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி கலந்து கொண்டு கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மற்றும் வட்டாரத்தில் செயல்படும் திட்டங்கள் பற்றி விளக்கினார். மேலும் வாடிப்பட்டி வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க

மையத்தில் விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இடுபொருட்களை ஏ.டி.எம் கார்டு, கூகுள்பே, போன் பே ஆகிய வற்றை பயன்படுத்தி தொகையினை அரசு கணக்கில் செலுத்தி இடுபொருட்கள் பெறுவதற்கான வசதி ஏற்பத்தப்பட்டுள்ளது. இதற்கான கருவி வாடிப்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

வேளாண் பொறியில்துறையில் இருந்து காசிநாதன், உதவி பொறியாளர், கலந்து கொண்டு துறையில் செயல்படும் திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். சத்தியவாணி வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டு வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். வேளாண்மை அலுவலர் (ஓய்வு) மகாராஜன் கலந்து கொண்டு ராபி பருவத்தில் சாகுபடி செய்யும் சிறுதானியங்கள் பயறு வகை தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்து விளக்கினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா உழவன் செயலி மற்றும் நன்றியுரை கூறினார் .மேலும் இப்பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணாதேவி சிறந்த முறையில் செய்திருந்தனர்.

# புஞ்சை நிலங்களில் மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு பயிற்சி



விருதுநகர், அக்.16

பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை இணைந்து விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு புஞ்சை நிலங்களில் மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு உயர் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சி அளித்தனர்.

பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், துவாக்குடி தலைமை இயக்குனர் ராஜா, தலைமை தாங்கினார். இணை இயக்குனர் (பயிற்சி) இலக்குவ பூபதி, வழி நடத்தினார். பருவநிலை மாற்றத்திற்கு உகந்த மண் மற்றும் நீர் சேமிப்பு உத்திகள் குறித்து வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வி ரமேஷ், உரையாற்றினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

நீடித்த நிலையான மண்வளம், ஊட்டச்சத்து மேலாண்மை, நுண்ணீர் பாசனம், நீர் சேமிப்பு தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், வறண்ட பகுதிகளுக்கு ஏற்ற பழ மரங்கள் சாகுபடி போன்ற தலைப்பில் முனைவர் கண்ணன், ஜெயச்சந்திரன், வசந்தா, ஷீபா, பாலசுப்பிரமணியன் மற்றும் வேணுதேவன் தொழில்நுட்ப உரையாற்றினார்கள்.

லீமா ரோஸ், உதவி பேராசிரியர் இப்பயிற்சியை ஒருங்கிணைத்து நன்றி கூறினார். இப்பயிற்சியில் நாற்பதிற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

